ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் மகாமகம் வருகிறது. அப்போது கூட்டம் அதிகம் வந்து சேரும். மேலும் வந்து செல்கிற பிரயாணிகளுக்கு அதிகப்படி இடவசதி தேவை என்று சொன்னால் அதை நகரமன்றத் தலைவர் அவர்களே, நகரமன்றச் சார்பில் கட்டித் தந்தால் நலமாயிருக்கும்.

நடமாடும் மருத்துவ மனைகள்

* 108 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—போதுமான M.B.,B.S. டாக்டர்கள் கிடைக்காத காரணத்தால் கிராமங்கட்கு Van மூலம் குறிப்பிட்ட நேரங்கட்கு டாக்டர் சென்று வரும் திட்டத்தை அமுல் நடத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நடமாடும் மருத்துவ மனைகள் ஆலங்காயம், கூடலூர், உதகமண்டலம், செய்யூர், ஹரூர், ஜெயங்கொண்டசோழபுரம், சங்கரன்கோயில், ராமநாதபுரம், கொடைக்கானல், திண்டுக்கல், ஈரோடு ஆகிய இடங்களில் செயல்படுகின்றன.

திரு. சு. துரைசாமி : திருப்பூர் பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்த வரையில் அங்கு நிரந்தரமாக டாக்டர்கள் வேண்டுமென்று பலமுறை கேட்டும்கூட யாரும் வராத நிலை இருக்கிறது. இதேபோன்று தமிழகத்தில் பல இடங்களில் எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் இல்லாமல் கிராம மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே வான் மூலம் மருத்துவ வசதி செய்து கொடுக்க குறிப்பிட்ட கிராமங்களுக்கு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி எல்லாக் கிராமங்களுக்கும் ஒரு டாக்டர் சென்றால் பரவலாக சென்று வர வசதியாக இருக்கும். ஆகவே அந்த முறையை அமல் படுத்தி மேலும் கிராம மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்க வசதியாக இருக்கும். ஆகவே அந்த முறையில் அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா ? திருப்பூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியையும் சேர்த்து அப்படிப்பட்ட ஒரு வானை அமர்த்தித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : போதுமான எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு சரியானதல்ல. உறுப்பினர் அவர்களின் ஆலோசனைகள் பரிசீலிக்கப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : இந்த எம்.பி.பி.பிஸ். டாக்டர்களுக்கு சம்பளம் சரியானபடி இல்லாததினால்தான் இந்த நாட்டில் யாரும் சர்க்கார் சேவைக்கு வருவதில்லை. இந்தக் குறை இருபது வருடங்களாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, வைத்திய வசதிகளை இன்னும் சிறிது விஸ்தரிக்க இந்த சர்க்கார் தங்கள் நிதியிலிருந்தோ அல்லது மத்திய சர்க்காரிலிருந்தோ டாக்டர்களுக்கு கூடுதல் சம்பளம் கொடுப்பதற்கு யோசனை ஏதாவது இருக்கிறதா ? அதற்கு ஏதாவது முயற்சி செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் எம்.பி.பி.எஸ். டாக்டர்களுக்கு கொடுக்கிற சம்பளம் போதுமானதல்ல என்ற முறையீடு எதுவும் என் கவனத்திற்கு வரவில்லை. ஏற்கனவே கொடுக்கிற சம்பளம் போதுமானது என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. எம். கண்ணப்பன் : பொள்ளாச்சி வட்டாரத்தில் உள்ள வால்பாறை, ஆனமலைப் பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் 20, 30 மைல்கள் சென்று மருத்துவ வசதி பெறவேண்டிய நிலை இருப்பதால் அந்தப் பகுதிகளுக்கும் இந்த நடமாடும் மருத்துவ மனையை ஏற்படுத்த இந்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பொள்ளாச்சியில் நல்லதொரு மருத்துவமனை இருந்து வருகிறது. வால்பாறை பகுதியைப் பொறுத்த வரையில் சிங்கோனா மருத்துவ மனைக்கு ஒரு வான் வாங்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

1968 பிப்ரவரி 29]

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : நடமாடும் மருத்துவ மனையின் சேவை பல்வேறு கிராமங்களுக்கு உடனடியாகத் தேவையாக இருக்கிறது என்ற காரணத்தினால் அப்படிப்பட்ட பயனுள்ள நடமாடும் மருத்துவ மனையை பல்வேறு கிராமங்களுக்கும் பயன்படத்தக்க முறையில் எல்லா மாவட்டங்களிலும் அதை விஸ்தரிக்க நம் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நடமாடும் மொபைல் வான் மூலம் தேவையான மருத்துவ வசதி செய்வதற்கு நடவடிக்கைகள் ஏற்கனவே சிலயிடங்களில் செயல்பட்டு வருகின்றன. தமிழகம் பூராவும் எல்லா மாவட்டங்களிலும் விரிவுபடுத்தலாமா என்பது பற்றி முதல் அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : போதுமான டாக்டர் பட்டம் பெற்றவர்கள் இருந்தும் சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் அவர்கள் பணியாற்ற விரும்பாமல் இருப்பதால் பட்டம் பெற்றவர்கள் கட்டாயமாக ஐந்து வருடங்களாவது சர்க்கார் சேவையில் பணியாற்ற வேண்டுமென்ற கட்டாய உத்தரவைப் பிறப்பிக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : கட்டாய சேவை தற்போது தேவையில்லை. ஏற்கனவே டாக்டர்கள் போதுமான எண்ணிக்கை இருக்கிறார்கள்.

திரு. ஈ. எம். நடராசன் : பவானி வட்டத்தைச் சார்ந்த பர்கூர் மலைப்பகுதி மக்களுக்கு ஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டுமென்றால் குறைந்தது 25, 30 மைல்கள் செல்லவேண்டியிருக்கிறது. மேலும் அப்பகுதியில் பஸ் வசதியோ அல்லது வேறு போக்குவரத்து வசதியோ கிடையாது. ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு இந்த நடமாடும் மருத்துவ மனை வசதியைத் தமிழக அரசு ஏற்படுத்தித் தருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது போன்ற கோரிக்கையை அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பினால் பரிசீலிக்கலாம்.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : தனியாக தொழில் நடத்தாத டாக்டர்களை மட்டும் சர்க்கார் மருத்துவமனைகளில் நியமிக்கும் உத்தேசமுண்டா ?

(விடை இல்லை.)

திரு. பா. நாகலிங்கம் : பல தொழிலாளர்கள் எங்கள் தொகுதியில் இருந்து திருவொற்றியூர் வந்து பணியாற்றுகிறார்கள். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரிக்கு வந்து மருத்துவ வசதி பெற திருவொற்றியூர் வருகிறார்கள். ஆகவே மையமாக உள்ள மீஞ்சூரில் ஒரு ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி அமைக்க உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபோன்ற உத்தேசம் தற்போது இல்லை.

திரு. வி. டி. அண்ணாமலை : மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. சந்திரசேகரன் அவர்கள் கிராமப் பகுதிகளில் அதிகம் டாக்டர்கள் இல்லை, கிராமப்புறங்களில் 80 சதவிகிதம் மக்கள் இருந்தும் அங்கு அதிகம் டாக்டர்கள் இல்லை என்று கூறியிருப்பதால் இனியாவது 80 சதவிகிதம் மக்களைக்கொண்ட கிராமங்களில் அதிகப்படிச் செலவு செய்து அதிகப்படி மருத்துவ வசதிகள், டாக்டர்கள் ஏற்படுத்த அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே ப்ளாக் ஒன்றுக்கு ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டர் மூலம் மருத்துவ வசதி செய்யப்பட்டு வருகிறது. அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் போதுமான டாக்டர்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு சரியானதல்ல. போதுமான எண்ணிக்கையில் டாக்டர்கள் இருக்கிறார்கள். தேவையான வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

[1968 பிப்ரவரி 29

திரு. என். எஸ். வி. சித்தன் : தமிழகத்தில் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்று தற்போது வேலே இல்லாதிருக்கும் டாக்டர்கள் எத்தனை பேர். அவர்களை வேலையில் அமர்த்திக் கொள்ள அரசாங்கம் என்ன திட்டம் வகுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சொல்கிறேன் விவரங்கள் சேகரிக்கப் பட்டு வருகின்றன.

திரு. ந. தீர்த்தகிரி : கிராம மக்களுக்கு வைத்திய வசதி அளிக்க அரசாங்கம் அக்கரைகொள்ளுமானல் பஞ்சாயத்து யூனியன் வட்டாரத் திட்டத்தின் கீழ் ப்ரைமரி ஹெல்த் சென்டர்ஸ், சப்-சென்டர்ஸ் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா ? அப்படி ஏற்படுத்தும் என்றால் எவ்வளவு நாளில் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே உள்ள திட்டப் படி இந்த ப்ரைமரி ஹெல்த் சென்டர்ஸ், சப் சென்டர்ஸ் ஆரம்பிக்கப்பட்டு நடத்தி வரப்படுகின்றன.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னுண்டோ : தமிழகத்தில் உள்ள அரசாங்க மருத்துவ மனைகளில் பணியாற்றுகிற எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்களில் ஒரு சிலர் நிரந்தர ஊழியர்களாகவும் ஒரு சிலர் தாற்காலிக ஊழியர்களாகவும் பணியாற்றுகிறார்கள். டாக்டர்கள் போதுமான அளவு இல்லை என்ற காரணத்தினால், அதை மனதிற்கொண்டு இப்படி தாற்காலிகமாக பணியாற்றும் எம்.பி.பி.எஸ். டாக்டர்களை நிரந்தர ஊழியர்களாக அரசாங்கம் ஏற்படுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக்கேள்வி "நட மாடும் மருத்துவ மனைகள்" என்பது பற்றியதாகும் என்பதை நான் உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. மு. இரத்தினசபாபதி : தலைவரவர்களே, சில பஞ்சாயத்து யூனியன்களில் அமைக்கப்பட்ட பிரைமரி ஹெல்த் சென்டர்கள் சில குக்கிராமங்களில் அமைக்கப்பட்ட காரணத்தால் போதுமான மக்களுக்கு வைத்திய வசதி செய்து தர முடியாத நிலையில் இருக்கிறது. எனவே அந்த பிரைமரி ஹெல்த் சென்டர்களை நடமாடும் வைத்தியசாலைகளாக மாற்றி அமைக்கும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பிரைமரி ஹெல்த் சென்டர்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில் சுற்றி இருக்கும் அந்தந்த இடங்களில் நடமாடும் வைத்திய சாலை தேவையென்றால் பரிசீலிக்கப் பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், கிராமப்புறங்களில் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் வைத்துதான் வைத்திய வசதி செய்ய வேண்டியிருக்கிறது. இப்பொழுது பிரைமரி ஹெல்த் சென்டர்கள் சிலவற்றில் டாக்டர்கள் இல்லை. அவைகளுக்கு டாக்டர்களை போட்டும், டாக்டர்கள் இருக்கும் இடங்களில் " வேன் " கொடுத்தால் மற்றக் கிராமங்களுக்கும் போக வசதியாக இருக்கும் காரணத்தால் பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு " வேனை " கொடுத்து வைத்திய வசதியைக் கிராமப்புறங்களில் ஏற்படுத்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எந்தெந்த பிரைமரி ஹெல்த் சென்டர்களில் டாக்டர்கள் இல்லை என்ற குறையை கனம் உறுப்பினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1968 பிப்ரவரி 29]

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு "வேன்"கள் கொடுக்கப்பட வேண்டுமென்றால் சில கண்டிஷன்கள் போடப்படும். ஆரம்ப சுகதார நிலையங்கள் அந்தக் கண்டிஷன்களைத் திருப்திடபடுத்தினால் "வேன்"கள் கொடுக்கப்படும்.

திரு. முனு ஆதி : தலைவரவர்களே, மொபைல் மெடிகல் சர்வீஸ் களில் எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் செல்லாததற்குக் காரணமே கல்யாண மானவர்கள் நீண்ட காலம் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டி யிருக்கிறது என்று கருதுவதால்தான் என்று தெரிகிறது. ஆகவே " பேச்சலர்களை " அந்த மொபைல் மெடிகல் சர்வீஸ்களில் டாக்டர் களாகப் போடும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்களின் கருத்து சரியானது அல்ல. மொபைல் வான்கள் குறிப்பிட்ட நேரத்தில் கொண்டு வந்து சேர்த்துவிடும். அதிலே எம்.பி. பி.எஸ். டாக்டர்கள் பணிபுரிகிறார்கள்.

திரு. ஆர். நாகசுந்தரம் : தலைவரவர்களே, தமிழகத்திலுள்ள முறையாகப் பயின்று பட்டம் பெற்ற சித்த வைத்தியர்களை அதிக அளவில் பயன்படுத்தி எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் பற்றாக்குறையைப் போக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது ஒரு நல்ல யோசனை.

திரு. எஸ். முருகையன் : சார், ஜவ்வாது மலைப்பகுதியிலிருக்கும் மக்களுக்கு மருத்துவ வசதி இல்லாமல் இருக்கும் காரணத்தால் அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படும் வகையில் ஆலங்காயத்திலிருந்து மொபைல் வேனை அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆலங்காயம் மொபைல் வேன் கொமட்ட ஏரி மலை, ஏலகிரி மலை, ஜவ்வாது மலைப் பகுதிகளுக்குச் செல்லுகிறது. எனவே, ஜவ்வாது மலைக்கும் இந்த மொபைல் வேன செல்லுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, செய்யூர் பகுதி யிலே ஏற்கனவே இருக்கின்ற அந்த " வேன் " பழுது அடைந்து விட்ட காரணத்தால் பவுஞ்சூர் பிரைமரி ஹெல்த் சென்டருக்கு ஜீப் அளிக்கும் வகையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குறிப்பிட்ட கோரிக்கை களை அரசாங்கத்தின கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக நட வடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. கோதண்டராமன் அவர்கள். அமைச்சரவர்கள் எவ்வளவு இரத்தினச் சுருக்கமாக விடைகளைக் கூறுகிறார்களோ அதைப்போல அங்கத்தினர்கள் வினாக்களை சுருக்கமாகக் கேட்டால் நன்றாக இருக்கும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், விவசாய அபிவிருத் திக்கு கால்நடை மிகவும் அவசியம். மனிதனுக்கு மட்டும் மருத்துவம் அல்ல, கால்நடைகளுக்கும் தேவை. ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒரு ஆண் டாக்டர், ஒரு பெண் டாக்டர், ஒரு கால்நடை மருத்துவ டாக்டர் என்று போட்டு இப்படி மருத்துவ வசதி கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கால்நடை மருத்துவ டாக்டர் விஷயமாக கனம் விவசாய அமைச்சர் அவர்களைக் கேட்கும்படி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : சார், மொபைல் மெடிக்கல் சர்வீஸ்கள் மத்திய சர்க்கார் உதவியில்லாமல் நடக்கும் என்று நினைக்கிறேன். மத்திய சர்க்கார், பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு வேன் சப்ளை செய்வதற்கு உண்டான உதவியை நிறுத்தியோ அல்லது தாமதப்படுத்தியோ செய்து அந்தக் காரணத்தினால் அந்த மாதிரி மொபைல் வேன்கள் சப்ளை செய்யப்படாமல் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பிரைமரி ஹெல்த் சென்டர்கள் சில கண்டிஷன்களை திருப்திப்படுத்த வேண்டும். அப்படி திருப்தி அளிக்கக்கூடிய இடங்களுக்கு வேன்கள் ஒதுக்கப் படுகின்றன. எந்தெந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் அந்த விதிமுறைகளைத் திருப்திப்படுத்தியிருக்கின்றனவோ அங்கே வேன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. போஜன் : தலைவரவர்களே, நீலகிரியிலும், உதகையிலும், கூடலூரிலும் இருக்கும் நடமாடும் மருத்துவமனை வேன்கள் மிகவும் பழமையானவையாக இருப்பதால் இவை அடிக்கடி பழுதடைந்து விடுவதால் நல்லமுறையில் செயல்பட முடிவதில்லை. ஆகவே, புதிய வேன்களை அங்கு அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேன்கள் பழுது அடைந்தால் அவை ரிப்பேர் செய்யப்படும்.

திரு. இல. பலராமன் : தலைவரவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலைப்பகுதிக்கு மொபைல் வேன் மூலமாக மருத்துவம் செய்யப்படுகிறது என்று கூறினார்கள். அங்கு செவ்வனே நடைபெறுவதாகத் தெரியவில்லை. எனவே அந்தப் பகுதியில் நடமாடும் மருத்துவ மனை செவ்வனே செயல்பட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபோன்ற குறைகள் இருப்பதாக கனம் உறுப்பினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், நடமாடும் மருத்துவ மனை ஒன்றில் எத்தனை டாக்டர்கள் இருக்கிறார்கள் ? அவர்களுக்கு உதவியாக எத்தனை நர்ஸுகள் இருக்கிறார்கள் ? அதில் " மேல் நர்ஸுகள் " எத்தனை பேர் ? " ஃபீமேல் நர்ஸுகள் " எத்தனை பேர் என்று அறிய ஆசைப்படுகிறேன்.

THE HON. THIRU. S. J. SADIQ PASHA : The staff pattern of each Mobile Medical Unit is as follows :—

(1) Assistant Surgeon—1.

(2) Pharmacist—1.

(3) Maternity Assistant—1.

(4) Male Nursing Orderly-*cum*-peon—1.

(5) Chauffeur- *um*-Cleaner—1.

The recurring expenditure in respect of each Mobile Medical Unit is stated to be Rs. 25,000 per annum and the non-recurring expenditure is Rs. 20,000.

1968 பிப்ரவரி 29]

திரு. தோ. மு. நல்லசாமி : தலைவரவர்களே, இதுவரைக்கும் ஆரம்பிக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளில் போதிய அளவு டாக்டர்கள் இல்லை என்ற குறை இருந்தது. ஆனால் இப்போது மருத்துவம் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் எதிர்காலத்தில் அந்த நிலை இருக்காது என்று தெரிகிறது. ஆகவே, அதிக ஆஸ்பத்திரிகளைத் துவக்க வேண்டிய அவசியத்தை அரசாங்கம் உணர்ந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வியோடு இது தொடர்புடையது அல்ல.

திரு. கே. சகாதேவக்கண்டர் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை பஞ்சாயத்து யூனியன்களில் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை, அப்படி ஆரம்பிக்கப்படாத பஞ்சாயத்து யூனியன்களுக்கு நடமாடும் ஆஸ்பத்திரி வசதியை விஸ்தரிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் ஏராளமாக இருப்பதாகக் கூறினார்கள். இப்பொழுது இருக்கின்ற சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்யும் டாக்டர்கள் அதிக நோயாளிகளைப் பார்க்க முடியாமல் திண்டாடுகிறார்கள் என்ற புகார் வந்து கொண்டிருக்கிறது. அந்த இடங்களில் டாக்டர்கள் சரியாகப்பார்ப்பது இல்லை என்று சொல்கிறார்கள். எனவே அந்த இடங்களில் டாக்டர்களை அதிகப்படுத்த இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை என்பதை கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அரசினர் மருத்துவ மனை, திருப்பூர்

*109 வின—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் உள்ள அரசினர் மருத்துவமனையை விரிவு படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) போதிய பண வசதியை நன்கொடையாகப் பெற்றவுடன் அரசு ஒப்புதல் அளித்து இவ்வேலை துவங்கப்படும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, திருப்பூர் நகரில் ஒரு லட்சத்து பத்தாயிரம் பேர்கள் இருக்கிறார்கள். திருப்பூர் பஞ்சாயத்து யூனியனில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. திருப்பூரை விடச் சிறிய ஊர்களான ஈரோடு போன்ற வேறு பல ஊர்களில் பெரிய ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஆனால் இந்த ஊரில் ஒரு ஆண் டாக்டரும், பெண் டாக்டரும் மட்டும் இருப்பது இந்த நகரத்துக்குப் போதுமானதாக இல்லை. ஆகவே விரைவில் திருப்பூர் ஆஸ்பத்திரியை விரிவுபடுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆஸ்பத்திரியை விரிவு படுத்த ஏற்கெனவே ஒரு கமிட்டி மூலமாக 5 லட்சம் ரூபாய் வசூலித்துக் கொடுப்பதாக திருப்பூர் பொது மக்கள் சார்பில் சொல்லப்பட்டது. ஆனால் இப்பொழுது 1½ லட்சம் ரூபாய்தான் வசூலித்துக் கொடுக்க முடியுமென்று சொல்லப்படுகிறது. எனவே, கனம் உறுப்பினர் அவர்கள் அவர்களது தீவிர முயற்சியின் காரணமாக நன்கொடை வசூலித்துக் கொடுத்தால் இதைக் கவனிக்கலாம்.